ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

# கிறிஸ்வுக்குள் விசுவாசியின் 'ஸ்தானமும்' நடைமுறை வாழ்க்கையின் 'நிலையும்'

**முன்னுரை :**

தேவனுக்கு முன்பாக கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசியின் ஸ்தானத்திற்கும் (Position) அவனுடைய நிலைக்கும் (State) உள்ள வித்தியாசத்தை சரிவர வேறுபடுத்திக்காட்டாததின் விளைவாக அநேக குழப்பங்கள் இருந்துவருகின்றன என்பதை நாம் கிறிஸ்தவ வரலாற்றில் காண்கிறோம். மறுபடியும் பிறந்த விசுவாசிகளின் வாழ்க்கையில் காணப்படும் பலவீனங்கள், தோல்விகள், முரண்பாடான கருத்துக்கள் ஆகியவை அவிசுவாசிகளுக்குள்ளும், விசுவாசி களுக்குள்ளும் குழப்பங்களை விளைவிக்கின்றன. இந்த காரியங்களில் குழப்பமாய் இருக்கிற மக்களின் மனதையும், இருதயத்தையும் இலகுவாக்கி குழப்பங்கள் அனைத்தையும் நீக்கி கிறிஸ்துவுக்குள் விசுவாசியின் ஸ்தானத்தையும், உண்மையான நிலையையும் தெளிவுபடுத்துவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

## இப்பாடத்தின் முக்கியத்துவம் :

விசுவாசத்தினாலே, ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவுக்குள் பரிபூரணராக்கப்பட்டிருக்கின்றனர். இருப்பினும், விசுவாசிகள் அனைவரும் அநேக சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு பாவங்களைச் செய்யும்படியாகத் தூண்டப் படுகின்றனர். இன்னும் பழைய சுபாவம் விசுவாசிகளுக்குள் இருப்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாய் இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் விசுவாசியின் ஸ்தானத்திற்கும், அன்றாட நடைமுறை வாழ்விற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ளவேண்டும். அப்படி அறிந்துகொள்ளத் தவறும்பொழுது குறிப்பாக, நிருபங்களை நாம் தெளிவாக விளங்கி கொள்ள முடியாது. ஒரு பாவி கர்த்தராகிய கிறிஸ்துவை, தன் சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ளுகிற அந்த நொடிப்பொழுதிலே அவன் தேவனுடைய பிள்ளையாகவும், கிறிஸ்துவின் உடன் சுதந்தரவாளியாகவும் மாற்றப்படுகிறான் என்று ஒவ்வொரு எழுத்தாளரும் தங்களுடைய நிருபங்களில் தெளிவாக எழுதியிருக்கின்றனர். ஒரு விசுவாசியின் ஸ்தானம் முழுமையானது, பரிபூரணமானது, மாற்றமுடியாதது, நித்தியமானது. இதனோடுகூட எதையும் சேர்க்கவோ மாற்றவோ இயலாது. நடைமுறை வாழ்க்கையில் பார்க்கும்போது விசுவாசிகளில் அநேகர் மாம்சசிந்தை கொண்டவர்களாகவும், உலக மனிதர்களைப்போலவும், பலவீனங்கள் உடையவர்களாகவும், கீழ்ப்படியாதவர் களாகவும் காணப்படுகின்றனர். எனவே ஆவிக்குரிய நிலையில் இவர்கள் வளர்வதற்கு ஏற்ற தேவஎச்சரிப்பும், சீர்திருத்தமும் அவசியமாக இருக்கிறது என்பதை ஒவ்வொரு எழுத்தாளரும் தங்களுடைய நிருபங்களில் வலியுறுத்தியிருக் கின்றனர். இந்த வித்தியாசத்தை அவிசுவாசிகள் அறிந்துகொள்வது அரிதாக இருக்கிறது. எனவே விசுவாசிகளாகிய நாம் இந்த வித்தியாசத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டியதும், மற்றவர்களுக்கு விளக்கவேண்டியதும் அவசியமாய் இருக்கிறது. இப்பாடம் இந்த நோக்கத்தை நிறைவாக்கும் என்று நாங்கள் பூரணமாய் நம்புகிறோம்.

**பாடம்**

## I. கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய 'ஸ்தானம்' பரிபூரணமானது, முழுமையானது :

நாம் மனந்திரும்பி கிறிஸ்துவில் விசுவாசம் வைத்த அந்தநேரத்தில், கிறிஸ்துவுக்குள்ளாக நாம் யாராக மாறியிருக்கிறோம், என்னென்ன காரியங்களைப் பெற்றுக்கொண்டோம் என்பதை தொடர்புபடுத்தக்கூடியதே நம்முடைய 'ஸ்தானம்' ஆகும். இந்த ஸ்தானம் பரிபூரணமானது.

i) கொலோசெயர் 2:10, "அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாய் இருக்கிறீர்கள்."

ii) எபிரெயர் 10:14, "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே . . . பூரணப்படுத்தியிருக்கிறார்."

iii) 1 யோவான் 4:17, "அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்."

iv) எபேசியர் 1:4, "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்."

v) 1 கொரிந்தியர் 1:30,31, "அந்தப்படி, நாம் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறோம். அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்."

vi) எபேசியர் 1:5,6, "பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்."

vii) எபேசியர் 1:3, "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்."

தேவன் விசுவாசிகள் அனைவரையும் கிறிஸ்துவுக்குள்ளாக காண்கிறார். "கிறிஸ்துவுக்குள்" என்ற பதத்தை ஏறக்குறைய 28 முறை எபேசியருக்கு எழுதின நிருபத்தில் மட்டும் அப்போஸ்தலனாகிய பவுல் பயன்படுத்தியிருக்கிறார். ஆச்சரியமான நமது ஆண்டவருடைய கிருபையினால் நமது ஸ்தானம், கிறிஸ்துவுக்குள் பரிபூரணமானதாகக் காண்கிறார்.

## II. நம்முடைய பரிபூரணமான, முழுமையான ஸ்தானம் கிறிஸ்து கல்வாரி சிலுவையில் செய்துமுடித்த பணியின் அடிப்படையில் அமைந்துள்ளது :

கிறிஸ்துவுக்குள்ளாக நாம் பெற்றிருக்கிற ஆசீர்வாதங்கள் நம்முடைய தகுதி, முயற்சியின் அடிப்படையில் அல்ல, முற்றிலுமாக கிறிஸ்து கல்வாரி சிலுவையில் செய்து முடித்த பணியின் அடிப்படையில் நமக்கு இலவசமாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

i) எபிரெயர் 10:14, "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே . . . பூரணப்படுத்தியிருக்கிறார்."

ii) வெளி. 1:6, "நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினார்."

iii) கலாத்தியர் 3:13, "கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" (எபேசியர் 1:7; 1 பேதுரு 1:18,19 வசனங்களை வாசிக்கவும்).

iv) 2 கொரிந்தியர் 5:21, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."

v) வெளி. 5:10, "எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்."

vi) 2 கொரிந்தியர் 5:18,19, "அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, . . . தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்."

vii) 1 கொரிந்தியர் 6:19,20, "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது. . . நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே."

## III. நம்முடைய ஸ்தானம் எதை உள்ளடக்குகிறது?

**குறிப்பு :**

நாம் பெற்றிருக்கிற நித்தியமான, முழுமையான, பரிபூரணமான இந்த இரட்சிப்பு தேவனுடைய ஒப்பற்ற கிருபையினால் மட்டுமே கிடைத்திருக்கிறது என்பதை ஒரு உண்மையான விசுவாசி உணர்ந்துகொள்ளுவான்.

i) இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் (1 யோவான் 3:2; ரோமர் 8:16).

ii) இப்பொழுது நாம் தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாய் இருக்கிறோம் (ரோமர் 8:17).

iii) இப்பொழுது நாம் ஆசாரியர்களாய் இருக்கிறோம் (வெளி. 1:6; 1 பேதுரு 2:9).

iv) இப்பொழுது நாம் பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 1:5).

v) இப்பொழுது நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாய் இருக்கிறோம் (எபேசியர் 5:30).

vi) இப்பொழுது நாம் அவருக்குள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறோம் (கொலோசெயர் 2:10).

vii) இப்பொழுது நாம் ஒரே பலியினாலே பூரணப்படுத்தப்பட்டிருக்கிறோம் (எபிரெயர் 10:14).

viii) இப்பொழுது நாம் பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் இருக்கிறோம் 1 பேதுரு 1:2; எபேசியர் 1:3).

ix) இப்பொழுது நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 1:7; 1 பேதுரு 1:18,19), நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 3:24; 5:1), பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் (எபிரெயர் 10:10,14), ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம் (2 கொரிந்தியர் 5:18; கொலோசெயர் 1:21), மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம் (ரோமர் 8:30).

x) இப்பொழுது நாம் புது சிருஷ்டியாயிருக்கிறோம் (2 கொரிந்தியர் 5:17).

xi) இப்பொழுது நாம் கிறிஸ்துவுக்குள் நீதியை உடையவர்களாய் இருக்கிறோம் (1 கொரிந்தியர் 1:30; ரோமர் 3:22; பிலிப்பியர் 3:9).

## IV. நம்முடைய ஸ்தானம் எப்பொழுது ஆரம்பமானது?

__குறிப்பு :__

ஒரு பாவி மனந்திரும்பி கர்த்தராகிய கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைக்கும் அந்த நொடிப்பொழுதிலே இரட்சிப்பைப் பெற்றுவிடுகிறான். மேலே கூறப்பட்டுள்ள அனைத்து ஆசீர்வாதங்களும் நம்முடையதாக மாறிவிடுகிறது. நம்முடைய ஸ்தானம் பரலோகத்தில் பெறக்கூடிய ஒன்றல்ல. கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தினால் அவைகளை இப்பொழுதே பெற்றிருக்கிறோம்.

i) யோவான் 3:18, "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்."

ii) யோவான் 3:36, "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்."

iii) யோவான் 1:12, "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் . . . அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."

iv) ரோமர் 5:1, "நாம் கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்."

v) 1 யோவான் 5:1, "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்."

vi) அப்போஸ்தலர் 13:39, "விசுவாசிக்கிற எவனும் நீதிமானாக்கப்படுகிறான்."

vii) ரோமர் 4:5, "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்" (ரோமர் 3:21,22).

## IV. கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் இந்த ஸ்தானத்தை மேலானதாக்க அல்லது உறுதிப்படுத்த விசுவாசி செய்யக்கூடிய எந்தக் காரியமோ அல்லது கிரியையோ அவசியமா?

__குறிப்பு :__

இக்கேள்விக்குப் பதில் 'இல்லை' என்றுதான் சொல்லவேண்டும். ஆயிரம் முறை 'இல்லை' என்றுதான் சொல்ல வேண்டும்.

அ. பிரியமானவருக்குள் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 1:5). நம்முடைய ஸ்தானமும், பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. நம்முடைய பரிசுத்தமும், நீதியும் அவரே (1 கொரிந்தியர் 1:30). அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இருக்கிறோம் (1 யோவான் 4:17).

ஆ. தேவனுடைய கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிப்பைப் பெற்றிருக்கிறோம் (எபேசியர் 2:8,9; ரோமர் 3:24; 2 கொரிந்தியர் 8:9). கிரியைகள் எந்த அளவிலும் கிருபையோடு சேர்க்கப்படமுடியாது, சேர்க்கவும் கூடாது.

i) கலாத்தியர் 5:4, "நியாயப்பிரமாணத்தினாலே நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்."

ii) ரோமர் 4:4, "கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல் கடனென்றெண்ணப்படும்"

iii) ரோமர் 11:6, "அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது. அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே."

## VI. புகழ்பெற்ற, பெயர் பெற்ற கிறிஸ்தவர்களைக் குறித்ததான கருத்து என்ன?

பெயர்பெற்ற கிறிஸ்தவர்கள் மற்ற ஏழ்மையான, பலவீனமான, படிப்பில்லாத கிறிஸ்தவர்களைக் காட்டிலும் மேலானவர்களா?

இக்கேள்விக்குப் பதில் 'இல்லை'. சிறப்பான அந்தஸ்து, சமுதாய மேன்மை, படிப்பு, பணம், தாலந்து இவைகளைக் கொண்டு நாம் இரட்சிப்பைப் பெறவில்லை. இப்பூமியில் மனந்திரும்பி, கர்த்தராகிய கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைக்கும் எந்த ஒரு மனிதனும் ஒரேவிதமாக இரட்சிக்கப்படுகிறான். தேவனுக்கு முன்பாக சமமாகவே கருதப்படுகிறான் (2 சாமுவேல் 14:14; ரோமர் 2:11; அப்போஸ்தலர் 10:34; கலாத்தியர் 2:6 இந்த வசனங்களை வாசித்துப் பார்க்கவும்). பரிசுத்த தேவனுக்கு முன்பு எல்லா மனிதரும் பாவிகளாய் இருக்கிறார்கள். தேவனிடத்தில் பட்சபாதமில்லை.

## VII. கிறிஸ்துவில் நாம் விசுவாசம் வைக்கும் முன்பு நம்முடைய நிலை என்ன?

தேவனுடைய கண்களுக்கு முன்பாக நம்முடைய ஆவிக்குரிய தன்மை எப்படிப்பட்டதாய் இருக்கிறது என்பதைக் குறிப்பதே 'நிலை' என்று பொருள்படும். இதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் முன்பு நம்முடைய நிலை என்ன என்பதைக் கீழ்க்கண்ட வசனங்கள் விவரிக்கின்றன.

i) நாம் இழந்துபோனவர்களாயிருந்தோம் (லூக்கா 19:10). நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம் (ஏசாயா 53:6).

ii) நாம் புத்தியில் அந்தகாரப்பட்டு குருடராயிருந்தோம் (எபேசியர் 4:18).

iii) தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராய் இருந்தோம் (எபேசியர் 4:18).

iv) நம்பிக்கையில்லாதவர்களாய் இருந்தோம் (எபேசியர் 2:12).

v) முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்தோம் (கொலோசெயர் 1:21; ரோமர் 8:7).

vi) அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தோம்; நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும், மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் (எபேசியர் 2:1,3)

vii) நாம் பெலனற்றவர்களாயிருந்தோம் (ரோமர் 5:6).

viii) நம்முடைய இருதயம் எல்லாவற்றைப் பார்க்கிலும் திருக்குள்ளதும், மகாகேடுள்ளதுமாயிருக்கிறது (எரேமியா 17:9).

ix) நாம் அனைவரும் தீட்டானவர்கள்போல் இருந்தோம் (ஏசாயா 64:6).

x) நமது இருதயத்தில் தேவ பயமில்லாதவர்களாகவும். தேவனுக்கு பிரயோஜனமற்றவர்களாகவும், உணராதவர் களாகவும், தேவநீதி அற்றவர்களாகவும், பாவத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாகவும் இருந்தோம் (ரோமர் 3:9–18).

xi) நாம் தேவ கோபாக்கினைக்கு உட்பட்டவர்களாய் இருந்தோம் (யோவான் 3:18,36; எபிரெயர் 9:27).

கிறிஸ்துவை ஒருவன் எப்பொழுது தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறானோ அந்த நிமிடமே அவன் விசுவாசி ஆகிவிடுகிறான் (யோவான் 1:12.13). கிறிஸ்து உடனே அவன் இருதயத்திற்குள் வந்து தங்கிவிடுகிறார் (எபேசியர் 3:17; கலாத்தியர் 2:20). கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தவுடனே நமக்குள் பரிசுத்த ஆவியானவர் வந்துவிடுகிறார் (ரோமர் 8:14; அப்போஸ்தலர் 2:38). மற்றொரு விதத்தில் சொல்வோமென்றால், நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்த உடனே ஒரு புதிய ஜீவனை அல்லது வாழ்க்கையைப் பெறுகிறீர்கள். உங்களிடத்திலிருந்து ஒரு புதிய தன்மையும் காணப்படுகிறது. ஆனால் உங்களுடைய பழைய பாவசுபாவத்தின் நிலை என்ன? மறைந்துவிட்டதா? முற்றிலுமாக நீக்கப்பட்டுவிட்டதா? இல்லை. பழைய பாவசுபாவம் இன்னும் உங்களில் இருக்கிறது (கலாத்தியர் 5:17; ரோமர் 7:17–23). எல்லா விசுவாசிகளும் இரண்டு சுபாவங்களை உடையவர்களாயிருக்கிறார்கள். புதிய சுபாவமானது கிறிஸ்துவுக்குள் பரிபூரணமானது. பழைய சுபாவத்தின் தன்மைகளை மேற்கொள்ள ஒவ்வொரு விசுவாசியும் கற்றுக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் புதிய சுபாவத்தின் தன்மைகளை வெளிப்படுத்த எப்பொழுதும் பிரயாசப்படவேண்டும்.

1. ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் நம்மைப் பூரணப்படுத்தியிருக்கிறார் (எபிரெயர் 10:14). ஏனவே நாம் பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் (2 கொரிந்தியர் 7:1).
2. கிறிஸ்துவோடுகூட நாமும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோம் (கலாத்தியர் 2:20). எனவே நாம் பாவத்திற்கு மரித்தவர்களாயிருக்கிறோம் என்பதை எண்ணிக்கொள்ளவேண்டும் (ரோமர் 6:11).
3. இயேசுகிறிஸ்துவுக்குள்ளாக நாம் பரிசுத்தவான்களாக இருக்கிறோம் (எபேசியர்1:1). ஏனவே நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்துகொள்ள வேண்டும் (எபேசியர் 4:1).
4. கிறிஸ்துவுக்குள் நாம் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறோம் (கொலோசெயர் 2:10). ஆகவே, இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளரும்படி நாம் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் (2 பேதுரு 3:18).

**குறிப்பு:**

மற்ற உதாரணங்களையும் கண்டுபிடித்துப் படியுங்கள். மேலும் நீங்கள் விசுவாசியின் இரண்டு சுபாவங்களைக் குறித்துப் படிக்க விரும்பினால் பாடம் 14–ஐ திருப்பிப் பார்க்கவும்.

## VIII. வேதாகமத்தில் உள்ள உதாரணங்கள் கிறிஸ்துவுக்குள்ளான நமது ஸ்தானத்திற்கும், நடைமுறையில் நமது உண்மையான நிலைக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டுகிறது :

1. மத்தேயு 5:14, "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்."

   மத்தேயு 5:16, "உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது."

2. எபேசியர் 5:8, "இப்பொழுதோகர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்."

   எபேசியர் 5:8, "வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்."

3. 1 தெசலோனிக்கேயர் 5:5, "நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக் கிறீர்கள்." 1 தெசலோனிக்கேயர் 5:6, "ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்."

4. 1 பேதுரு 2:9, "நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."

   1 பேதுரு 2:11, "பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டுவிலகுங்கள்."

5. 1 கொரிந்தியர் 6:11, "ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்."

   1 கொரிந்தியர் 6:7, "நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது."

6. 1 கொரிந்தியர் 1:2, "நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களு மாயிருக்கிறீர்கள்." 1 கொரிந்தியர் 1:11, "என் சகோதரரே உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று எனக்கு அறிவிக்கப்பட்டது." 1 கொரிந்தியர் 3:3, "நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருக்கிறீர்கள்."

7. கலாத்தியர் 3:26, "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக் கிறீர்களே."

   கலாத்தியர் 4:9, "நீங்கள் மறுபடியும் திரும்பி மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?"

8. எபிரெயர் 10:14, "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரேபலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தி யிருக்கிறார்." பிலிப்பியர் 3:12, "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல். . . ஆசையாய்த் தொடர்கிறேன்."

<u>**குறிப்பு :**</u>

இன்னும் அநேக உதாரணங்கள் இருக்கின்றன. உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக சிலவற்றைத் தேடி கண்டுபிடித்து வாசியுங்கள்.

**முடிவுரை :**

பழைய பாவசுபாவம் நம்மில் இன்னும் இருக்கிறபடியினால், பாவம் செய்து தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணக்கூடாது. ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? (ரோமர் 6:1,2). மாறாக நம்முடைய ஆசை, இச்சைகளை தொடர்ந்து சிலுவையில் அறையவேண்டும் (கலாத்தியர் 5:24). அப்படியே நாமும் பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்ள வேண்டும் (ரோமர் 6:11). பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போடவேண்டும் (கொலோசெயர் 3:9). ஆவிக்கேற்றபடி நாம் நடந்துகொள்ள வேண்டும் (கலாத்தியர் 5:16). இயேசுகி றிஸ்துவின் கிருபையில் நாம் வளரவேண்டும் (2 பேதுரு 3:18). நாம் பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம் (2 கொரிந்தியர் 7:1). தேவனுடைய வார்த்தையை அறிந்து கொள்வதற்கு அவர்தாமே உங்களுக்குப் போதிய ஞானத்தைக் கொடுப்பாராக.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## கிறிஸ்துவுக்குள் விசுவாசியின் 'ஸ்தானமும்' நடைமுறை வாழ்க்கையின் 'நிலையும்'

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

### சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்

1. ஒரு விசுவாசியின் ஸ்தானம், கிறிஸ்துவுக்குள் பரிபூரணமானது :

   a. பாவமற்றவராக மாறி, இந்த வாழ்வில் பரிபூரணமடையலாம்

   b. இன்னும் சோதனைக்கு உட்பட்டிருக்கிறார்

   c. கிறிஸ்தவ வாழ்வில் தோல்வி என்பது இல்லை

2. கிறிஸ்துவுக்குள் விசுவாசியின் ஸ்தானத்தைக் காண்பிக்கும் வசனங்கள் எவை? **(இந்த உண்மையை காண்பிக்கும் அனைத்து வசனங்களையும் குறிக்கவும் )**

   a. கொலோசெயர் 2:10

   b. 1 யோவான் 4:17

   c. எபேசியர் 1:6

   d. 1 கொரிந்தியர் 1:30

3. நமது ஸ்தானத்தின் அடிப்படை

   a. நாம் தேவனுக்குச் செய்யும் காரியம்

   b. கிறிஸ்துவின் பணி

   c. நமது ஆவிக்குரிய நிலை

4. ஒரு விசுவாசிக்கு சரியான ஸ்தானம் தேவனுக்கு முன்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது :

   a. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்பொழுது

   b. அந்நியபாஷை பேசும்பொழுது

   c. நல்ல உணர்வைப் பெற்றுக்கொள்ளும் பொழுது

5. ஒரு விசுவாசி தனது ஸ்தானத்தை தேவனுக்கு முன்பாக அதிகப்படுத்திக்கொள்ள முடியுமா?

   a. ஆம்

   b. இல்லை

   c. கடினமாக உழைத்தால் முடியும்

6. தேவனுக்கு முன்பாக, கிறிஸ்துவுக்குள் இருக்கும் இரண்டு நபர்களி ஸ்தானத்தில் காணப்படும் வேறுபாடு என்ன?

   a. ஒரு நபர் எப்படி கடினமாக உழைக்கிறார் என்பதைப் பொருத்து

   b. ஒரு சாதாரண விசுவாசியைவிட ஒரு பெரிய பிரசங்கியார் பாதுகாப்பான ஸ்தானத்தைப் பெற்றிருக்கவில்லை

   c. உண்மையான விசுவாசியைவிட உண்மையுள்ள விசுவாசி பாதுகாப்பான ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறார்

7. ஒரு விசுவாசியின் ஸ்தானம் :

   a. கிறிஸ்துவுக்குள் அவரது நிலை

   b. அவரது ஆவிக்குரிய நிலை

   c. அவரது பரிசுத்தமாக்கப்பட்ட நிலை

8. ஒரு விசுவாசியின் நிலை :

   a. கிறிஸ்துவுக்குள் அவரது நிலை

   b. அவரது ஆவிக்குரிய நிலை

   c. அவரது நீதிமானாக்கப்பட்ட நிலை

9. மத்தேயு 5:14 மற்றும் 5:16 ஆகிய வசனங்கள், ஒரு விசுவாசியின் ஸ்தானத்திற்கும் நிலைக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிப்பது எப்படி? வாழ்க்கையின் எப்பகுதி?

   a. ஆவிக்குரிய பகுதி

   b. சாட்சி பகர்தல்

   c. விசுவாசத்தில் உண்மையாயிருத்தல்

10. எபேசியர் 5:8–ம் வசனத்தில், உள்ள 2 சொற்றொடர்கள் நமது ஸ்தானத்தையும், நிலையையும் குறிக்கிறது :

    a. உலகத்துக்கு முன்பு நாம் வாழும் விதம்

    b. சரீர கால்களால் நடக்கும் விதம்

    c. பிறரோடு பேசும் விதம்

11. மாம்சத்தைக் குறித்து ஒரு விசுவாசி

    a. செவி சாய்க்க வேண்டும்

    b. திருப்தி செய்ய வேண்டும்

    c. சிலுவையில் அறைய வேண்டும்

12. ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய நிலை :

    a. நேரத்துக்கு நேரம் மாறும் (காலத்துக்கு காலம் மாறும்)

    b. மாறாது

    c. தேவன் மாற்றும்பொழுது மாறும்

13. கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசியின் ஸ்தானம் :

    a. காலத்துக்கு காலம் மாறும்

    b. உணர்வுகள் மாறும்பொழுது மாறும்

    c. மாறாது

14. எபிரெயர் 10:14–ம் வசனம், ஒரு விசுவாசி நித்தியமாக பரிபூரணபடுத்தப்பட்டிருக்கிறார் என்று கூறுகிறது. அவரது நிலையைக் குறித்து அவர் என்ன செய்ய வேண்டும் என்று எந்த வசனம் கூறுகிறது?

    a. ரோமர் 6:1

    b. கொலோசெயர் 2:10

    c. 2 கொரிந்தியர் 7:1

15. கலாத்தியர் 2:20–ம் வசயம், ஒரு விசுவாசி கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார் என்று கூறுகிறது. சோதனையைக் குறித்து அவர் என்ன செய்ய வேண்டும் என்று எந்த வசனம் கூறுகிறது?

    a. ரோமர் 6:11

    b. கொலோசெயர் 2:10

    c. 2 கொரிந்தியர் 7:1

**16.** பொருத்துக :– கிறிஸ்துவுக்குள் இருக்கும் நமது ஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருப்பது என்ன? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| ------------ | நாம் தேவனுடைய பிள்ளைகள் | a. எபேசியர் 1:6 |
| ------------ | நாம் ராஜரீக ஆசாரியக்கூட்டம் | b. 2 கொரிந்தியர் 5:17 |
| ------------ | பிரியமானவருக்குள் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் | c. கொலோசெயர் 2:10 |
| ------------ | கிறிஸ்துவுக்குள் நாம் முழுமைபெற்றிருக்கிறோம் | d. 1 யோவான் 3:2 |
| ------------ | கிறிஸ்துவுக்குள் நாம் புதிய சிருஷ்டியாயிருக்கிறோம் | e. 1 பேதுரு 2:9 |

17. பொருத்துக :– நாம் விசுவாசிகளாக மாறுவதற்கு முன்பு நமது நிலை என்ன? **(கொடுக்கப்பட்டிருக்கும் வசனத்திற்கு முன்பாக சரியான வார்த்தையை எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| ------------------------------ | ஏசாயா 53:6 | a. நமக்கு பொல்லாத இருதயம் இருந்தது |
| ------------------------------ | எபேசியர் 2:12 | b. நாம் பாவத்துக்கு மரித்திருந்தோம் |
| ------------------------------ | எபேசியர் 2:1 | c. நாம் இழந்து போயிருந்தோம் |
| ------------------------------ | எரேமியா 17:9 | d. நாம் நம்பிக்கையற்றவர்களாக இருந்தோம் |

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________